


துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ப. ஜாகிர்உசேன் ஏற்பாட்டில் சோலாரில் உள்ள அட்சயம் அறக்கட்டளையில் உள்ள முதியோர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மளிகை பொருட்கள் மற்றும் அறுசுவை உணவை மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், மாநகர கழக செயலாளர் மு. சுப்ரமணியம், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், பொன்னுச்சாமி, கே சந்திரசேகர், துணை அமைப்பாளர் சீனிவாசன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டத்தில் இதுவரை 11 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும் 12வது முகாமானது 29.11.2025 அன்று உதகை வட்டாரத்திற்குட்பட்ட ராக்லேண்ட், சாம்ராஜ்எஸ்டேட், சாம்ராஜ் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இம்முகாமினை தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர்கே.எம். ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள்! திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர கழக இளைஞரணி சார்பில்

# கழக மூத்த முன்னோடிகள் 48 நபர்களுக்கு பொற்கிழி!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கி சிறப்புரை!



திருச்சி, டிச. 1 –

DCM 48 எனும் தலைப்பில் திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக கழக இளைஞரணி செயலாளர் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக 48 நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது அதன் தொடர்ச்சியாக திருச்சி மார்க்கெட் அரியமங்கலம் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட மாநகர இளைஞரணி சார்பாக பொற்கிழி வழங்கும் விழா நடைபெற்றது விழாவிற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட இளைஞரணிச் செயலாளர் வெங்கடேஷ்குமார் மாநகர இளைஞரணி அமைப்பாளர் முர. முத்து தீபக், ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கழகத் துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு மூத்த நிர்வாகி களுக்கு பொற்கிழி வழங்கி விழா பேருரை ஆற்றினர்.

விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய பயணம் இயக்கத்திற்கு என்று வரும் போது கொள்கை தடம் மாறாமல் வர வேண்டும் நீதிக்கட்சி முதல் தலைவர் கலைஞர் காலம் முதல் இன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வரை நாம் எல்லாம் அவர்களைப் பின்பற்றும் கொள்கை கூட்டமாக இருந்திட வேண்டும்

நம்முடைய மாநில இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் சொல்வது கொண்டாட்டம் என்பது நம்மை புதுப்பித்துக் கொள்வதற்கு கொள்கை பிரகடன படுத்துகின்ற வகையில் நம் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் அதன் வழியில் தான் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகின்ற நிகழ்வு நடைபெறுகிறது.

காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்ற நூலில் நம் திராவிட மாடல் அரசின் ஒவ்வொரு துறை சார்ந்த திட்டங்களையும் தொகுத்து வழங்கி இருக்கின்றது இத்திட்டங்களால் மக்கள் பெற்ற பயன்களை இப்புத்தகம் அழகாக விளக்குகிறது நம் துணை முதல்வர் இந்த புத்தகத்தை நமக்கு வடித்து தந்திருக்கின்றார் இந்தப் புத்தகம் நம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டும்

கொரோனா காலத்தில் ஒன்றிய அரசு இருக்கக்கூடிய பிரதமர் கைதட்டுங்கள் விளக்கேற்றுங்கள் என்று கூறினார், கைதட்டுவதாலும் விளக்கேற்று வதாலும் கொரோனா சென்று விடுமா என நமக்கு தெரியாது நாம் கொள்கை ரீதியாக வேறுபட்டாலும் நம் நாட்டின் பிரதமர் ஒன்று சொல்கின்றர் என்று கவனித்தோம் ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம் தலைவர் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறினார், நாம் அறிவியல் சார்ந்து இயக்கத்தில் இருக்கின்றோம் என்பதற்கு உதாரணமாக இதைக் கூறினேன்.

நம் துணை முதல்வர் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டவில்லை என்ற காரணத்தினால் ஒரு செங்கலை கடந்த தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தின் போது பாரதிய ஜனதாவின் தோலை உரித்ததின் விளைவாக இப்பொழுது மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை மிக விரைவாக கட்டப்பட்டு வருகிறது.

அமைச்சர் மு.பெ. சாமிநாதன் உரை வருமாறு:

இன்று நமது துணை முதல்வரும் மாநில விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில விளையாட்டு துறைக்கு பொறுப்பேற்றது முதல் இவ் விளை யாட்டுத்துறை தேசிய அளவில் பல்வேறு விருது களைப் பெறுகின்ற வகையில் எடுத்துச் சென்று இருக்கின்றார்.

விளையாட்டுத்துறை என்று ஒரு துறை இருக்கின்றதா என்று பலர் நினைத்த நேரத்தில் அத்துறையை சிறப்பாக வழி நடத்தி வருகின்றார் நம் துணை முதல்வர் நம் தமிழ்நாட்டின் விளையாட்டு வீராங்கனை கள் ஒன்றிய அரசின் பல்வேறு விருதுகளை பெற்று வரும் செய்திகளை நாள்தோறும் பார்க்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் மகிழ்ச்சி அளிக்கிறது.

துணை முதல்வராக பொறுப்பேற்று மாவட்டம் தோறும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றார் அதன் வரிசையில் திருப்பூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட போது நான் ஆச்சரியப்பட்டேன், திடீரென தொலைபேசியில் பொது மக்களிடம் தொடர்பு கொண்டு உரையாடினார் இது போன்ற நிகழ்வை நான் இதுவரை பார்த்ததில்லை. இந்த ஆய்விற்கு முன்னதாக துணை முதல்வர் அலுவலகத்தில் இருந்து ஒரு சில ஐஏஎஸ் அதிகாரிகள் மாவட்டத்தில் முகாமிட்டு மக்களின் பல்வேறு துறைகளை நம் மாவட்டத்தில் உள்ள ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுக்கு மற்றும் எங்களுக்கு கூட தெரியாமல் மக்களிடம் குறைகளை கேட்டு அவற்றை பட்டியலிட்டு துணை முதல்வரிடம் அளித்தனர் அவற்றைப் பெற்ற துணை முதல்வர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆலோசனை செய்து பிறகு அந்த சம்பந்தப்பட்ட மனுதாரரிடம் தொடர்பு கொண்டு உங்களுடைய குறை குறிப் பிட்ட நாளில் நிவர்த்தி செய்யப்படும் எனக் கூறியது பொதுமக்களிடம் நன்மதிப்பையும் மாவட்ட நிர்வாகத்தில் பணியின் வேகமும் அதிகரித்தது இவ்வாறு அக்கறையுடன் செயல்பட்டவர் தான் நம் துணை முதல்வர்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், கே என் சேகரன், சபியுல்லா, பகுதிகழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், ராஜ்முகம்மது, மோகன், மணிவேல், விஜயகுமார், பாபு , சிவக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரவீந்திரன், தேசிங்குராஜ், பெர்க்னாட் சாமிநாதன், அல்லாபிச்சை, கண்ணன், சையத்சாகிப், சரத்குமார், ரஞ்சித்குமார் கலந்துகொண்டனர். இறுதியாக, ஆர். பார்த்தசாரதி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் நன்றியுரை ஆற்றினார்.

### உதகை சாம்ராஜ் மேல்நிலைப் பள்ளியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம்!

## கா.இராமச்சந்திரன் – கே.எம்.ராஜூ ஆய்வு!

உதகை, டிச. 1 –

நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்புமுகாம் முதல மைச்சர் அவர்களால் ஆகஸ்டு 2ஆம் தேதி சென்னை மற்றும் தமிழகமெங்கும் துவக்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் 1256 முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் ஆகஸ்ட் 2ஆம் தேதி "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்புமுகாம் (முதல் முகாம்) நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில் இது வரை 11 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. மேலும் 12வது முகாமானது இன்று (29.11.2025) சனிக்கிழமை உதகை வட்டாரத்திற்குட்பட்ட ராக்லேண்ட், சாம்ராஜ் எஸ் டேட், சாம்ராஜ் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

இம்முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு அரசு தலைமை கொறடா திரு.கா. ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் திரு.கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இம்மருத்துவ முகாமில் பல்வேறு வகை சிறப்பு மருத்துவ சேவைகளான, புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடுஅட்டை வழங்குதல், அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான அடையாளஅட்டை வழங்குதல், இரத்தப்பரிசோதனை, இசிஜி, எக்கோ, எக்ஸ்ரே, அல்ட்ராசோனோகிராம் ஸ்கேன், சளிபரிசோதனை, சிறுநீர் பரிசோதனை மற்றும் மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து பரிசோதனை முடிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கோப்புகளும் (Folder) உடனுக்குடன் பெறப்படுமாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் மாண்புமிகு அரசு தலைமை கொறடா திரு. ராமச்சந்திரன் அவர்கள் பேசும் பொழுது பொதுமருத்துவம், பொதுஅறுவை சிகிச்சை, எலும்பு முறிவு, மகப்பேறுமருத்துவம், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை மருத்துவம், ரேடியாலஜி, நுரை யீரல்நோய் சிகிச்சை, நீரிழிவுநோய் சிகிச்சை, சித்தா மற்றும் ஆயுர்வேதம் ஆகிய சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. மேலும் மேல் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து சிறப்பு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மருத்துவ முகாமிற்கு பல்வேறு சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வருகைதந்து சிறப்பு மருத்துவச்சேவைகள் அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறினார்.

உடன் மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் மரு. சோமசுந்தரம், உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் மரு.ரவிசங்கர். வட்டார மருத்துவ அதிகாரி மரு. முருகேசன் மற்றும் மாவட்டக் கழக அவைத்தலைவர் போஜன், உதகை தெற்கு ஒன்றிய (கிழக்கு) செயலாளர் பரமசிவன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட கம்பைநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1000 மாணவியருக்கு மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் கவிதா மோகன்தாஸ் இனிப்புகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் ரத்தினவேல்,பேரூராட்சி தலைவர் வடமலை முருகன், மாசிலாமணி, கிருஷ்ணன், ராஜ்கமல், உதயசூரியன் மாவட்ட நடேசன், சுப்புராஜ், சிவசக்தி, சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பா. நாகலிங்கம்

டிசம்பர் 1 (2006)



கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிகாலத்தில் ‘மிசா’ கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கும்பகோணம் மாநகராட்சி சிவரஞ்சனி எம்,சி, கணவர்

# 30வது வட்டக் கழகச் செயலாளர் என்.எஸ்.சிவக்குமார் மறைவு!


## சாக்கோட்டை க.அன்பழகன், சு.ப.தமிழழகன் அஞ்சலி!

தஞ்சாவூர், டிச. 1 –

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரம் 30வது வட்டக் கழக செயலாளரும், கும்பகோணம் 29வது மாமன்ற உறுப்பினர் சிவரஞ்சனி கணவருமான என்.எஸ்.சிவக்குமார் மாரடைப்பு காரணமாக 29.11.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி அளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சிவக்குமார் அவர்கள் கழகம் அறிவித்த போராட்டம், ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்று, சிறப்பான கழக பணியாற்றியவர். இவருடைய மனைவி 29வார்டு மாமன்ற உறுப்பினராக உள்ளார். இவருக்கு ஒரு மகன், மகள் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்து அறிந்த தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகர செயலாளர்




துணை மேயர் சு.ப.தமிழழகன், துணைச் செயலாளர் பிரியம் ஜெ.சசிதரன், பகுதிகழகச் செயலாளர் டி.வி.கிருஷ்ண மூர்த்தி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சிவக்குமாரின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சிவக்குமாரின் இறுதிச்சடங்கு நேற்று (30.11.2025–ஞாயிறு) மாலை 03.00 மணியளவில் அவரின் சொந்த ஊரான புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, தேனிமலைதேனூர் என்ற பகுதியில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். குணசேகரன்

டிசம்பர் 1 (2021)



மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சமூக சேவையாற்றியதன் காரணமாக ‘சமூக விருதுகள்’ பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.